பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**28 01 2026 WEDNESDAY 6.30 PM**

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** நாட்டின் வளர்ச்சிக்கான அனைத்து அம்சங்களையும் குடியரசுத் தலைவர் உரை எடுத்துரைத்துள்ளதாக குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

**2)** நாடு முழுவதும் **12** ஆயிரம் ஆயுஷ் நலவாழ்வு மையங்கள் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**3)** தமிழகத்தில் அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக திமுக கூறியுள்ளது.

**4)** சொத்துவரி மற்றும் மின் கட்டண உயர்வு காரணமாக மக்கள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

**5)** இந்தியா — நியூசிலாந்து இடையேயான நான்காவது டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

<u>-- இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<<<<>>>>>>

நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஆற்றிய உரை, தொலைநோக்கு பார்வை கொண்டதாக உள்ளது என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், நாட்டின் வளர்ச்சிக்கான அனைத்து அம்சங்களையும் குடியரசுத் தலைவர் தமது உரையில் எடுத்துரைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு திட்டங்களின் பலன்கள் அனைத்து தரப்பினரையும் சென்றடைந்திருப்பதை இந்த உரை உறுதி செய்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்ட நாட்டு மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றுவதை குடியரசுத் தலைவரின் உரை எடுத்துரைப்பதாகவும் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

நாடு முழுவதும் 12 ஆயிரம் ஆயுஷ் நலவாழ்வு மையங்கள் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கேரளாவில் உள்ள ஆர்ய வைத்தியசாலை அறக்கட்டளை மருத்துவமனையின் நூற்றாண்டு கொண்டாட்டங்களில் காணொலி வாயிலாக அவர் உரையாற்றினார்.

ஆயுஷ் மற்றும் மூலிகைப் பொருட்கள் ஏற்றுமதி தற்போது 6 ஆயிரத்து 500 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

ஆயுர்வேதா வலிமையான சிகிச்சை முறை என்பதை, 125 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த நிறுவனம் எடுத்துரைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மக்களின் சுகாதாரத்தை பாதுகாப்பதில் ஆயுர்வேதா சிகிச்சை முறை முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தியா — ஐரோப்பா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் பாரம்பரிய மருத்துவ முறைக்கு வலு சேர்க்கும் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பத்மஸ்ரீ விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மறைந்த குறும்பா ஓவியர் கிருஷ்ணனின் குழந்தைகளின் கல்விக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உறுதியளித்துள்ளார்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தின் கல்லார் பகுதியில் வசித்துவரும் அவரது குடும்பத்தினருடன் தொலைபேசி மூலம் உரையாடிய டாக்டர் எல். முருகன், இதற்கான உறுதிமொழியை அளித்தார்.

இதற்காக மத்திய இணையமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக அக்குடும்பத்தினர் தெரிவித்தனர்.

<<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக வெற்றிபெறும் என்று மாநில அமைச்சர் திரு எ வ வேலு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டம் பெரிய வெண்மணியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

மாநில அரசின் திட்டங்கள் மூலம், அனைத்துத் தரப்பினரும் பயனடைந்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திமுக கூட்டணியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தொடரும் என்றும் திரு எ வ வேலு கூறினார்.

<<<<<<<>>>>>>

திமுக அரசின் மின் கட்டண மற்றும் சொத்துவரி உயர்வு காரணமாக மக்கள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஐந்தாண்டுகளில் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த திமுக அரசு தவறிவிட்டதாக தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியில் புதிய கட்சிகள் இடம்பெற வாய்ப்புள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இன்று மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்டணிக்கு தலைமை தாங்கும் திரு எடப்பாடி பழனிசாமிதான் தோழமை கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருவதாக கூறினார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் தங்கள் கூட்டணி வெற்றிபெறும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

நிதி நிர்வாகத்தில் திமுக அரசு தோல்வியடைந்துள்ளதாக பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில். தமிழகத்தின் நிதிநிலைமையை திமுக அரசு சீரழித்து இருப்பதாக தெரிவித்துள்ளார்.

தமிழக அரசின் வரிவருவாய் 16 சதவீதம் வீழ்ச்சியடைந்து இருப்பதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிலேயே மிக அதிக கடன் பெற்ற மாநிலமாக தமிழகத்தை திமுக அரசு மாற்றியுள்ளதாகவும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

காங்கிரஸ் — திமுக இடையேயான கருத்து வேறுபாடுகள் காணாமல் போய்விடும் என்று மதிமுக பொதுச்செயலாளர் திரு வைகோ கூறியுள்ளார்.

இன்று மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தியை, திமுக துணை பொதுச்செயலாளர் திருமதி கனிமொழி புதுதில்லியில் சந்தித்து பேசியதை சுட்டிக்காட்டினார்.

திமுக, காங்கிரஸில் உள்ள ஒருசிலருக்கு ஏற்பட்டுள்ள மன கசப்புகளுக்கு தலைமை நிலையில் நடைபெறும் பேச்சுக்கள் மூலம் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் திரு வைகோ தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

அரசு மருத்துவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற திமுக அரசு முன்வர வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவர்கள் பணிநியமனம் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி போராட்டம் நடைபெற்று வருவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசு மருத்துவ சங்கங்களின் தலைவர்களுடன் பேச்சு நடத்தி, இப்பிரச்சினைக்கு உரிய தீர்வினை காண திமுக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு வீரபாண்டியன் கேட்டுக் கொண்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

வளர்ச்சி திட்டங்கள் குறித்த தகவல்களை அளிக்கும் வகையில் செய்திகள் வழங்கப்பட வேண்டும் என்று தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் தென் மண்டல தலைமை இயக்குநர் திரு பழனிசாமி கூறியுள்ளார்.

மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப்பணிகள் குறித்து ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் காரைக்காலில் நடைபெற்ற பயிலரங்கில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

செய்திகளில் உண்மைத் தன்மை இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

சமுதாயத்திற்கு தேவையான நிகழ்வுகளை செய்தியாக வெளியிட வேண்டும் என்றும் திரு பழனிசாமி வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>>

திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தில் உள்ள ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த அருள்மிகு ரிஷபேஸ்வரர் திருக்கோவில் கும்பாபிஷேகம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதில் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — ரவிச்சந்திரன் - 35 Sec.)***

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் ஆளுநர் திரு ஆர் என் ரவி கலந்துகொண்டு 780 பேருக்கு பட்டங்களை வழங்கினார்.

-----------------

மதுரை மாவட்டத்தில் கல்லூரி மாணவர்களுக்கான மடிக்கணினிகளை மாநில அமைச்சர் திரு மூர்த்தி இன்று வழங்கினார்.

-------------------

திருவாரூர் மத்திய பல்கலைக்கழக மாணவர் சேர்க்கைக்கான நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க வரும் **30-**ஆம் தேதி கடைசி நாளாகும் என்று துணைவேந்தர் திரு கிருஷ்ணன் கூறியுள்ளார்.

-------------------

வேலூர் மாவட்டத்தில் தூய்மைப்பணியாளர்களுக்கு செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம் அவர்களுக்கான நலவாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி ஆறுச்சாமி தலைமையில் இன்று நடைபெற்றது.

-----------------

தண்டவாளத்தில் மரங்கள் விழுந்ததால், மேட்டுப்பாளையம் — குன்னூர் இடையேயான மலை ரயில் போக்குவரத்து இன்று ஒருநாள் மட்டும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

--------------

திருப்பூர் மாவட்டம் அமராவதியில் உள்ள சைனிக் பள்ளியில் அணிவகுப்பு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா — நியூசிலாந்து இடையேயான நான்காவது டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

விசாகப்பட்டினத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியில், டாஸ் வென்ற, இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரை முதல் மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்று இந்தியா கைப்பற்றியுள்ளது.

-----------------

டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் சர்மா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

சூரியகுமார் யாதவ் 7-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

--------------

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-15. 21-9** என்ற செட் கணக்கில், மலேசியாவின் **Sholes Aidil** -ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Anmol Kharb**-ம் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

------------

ஐக்கிய அரபு எமிரேட்டில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருதுஜா போஸ்லே — சீனாவின் **Wushuang Zheng** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<<<END>>>>>>>**